ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2228/29 - 2021 මැයි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.05.20

*2228/29 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் அம்பலன்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*அம்பலன்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், அம்பலன்கொடை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மாதுவகே தனசேன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான அம்பலன்கொடை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக எகொடகே அஜித் சுசிர சாந்த என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது அம்பலன்கொடை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கந்த உட சந்ரலால் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு எகொடகே அஜித் சுசிர சாந்த என்பவர் அம்பலன்கொடை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**கே. யூ. சந்ரலால்,**
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*அம்பலன்கொடை நகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*காலி,*
*2021, மே 18.*

*06-36*

1A - G 34366 — 35 (2021/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*